செய்தி வெளியீடு எண்: 389 நாள்: 27.02.2024

## செய்தி வெளியீடு

### மாற்றுத்திறனாளிகள் நலத்துறை

பார்வையற்றக் கல்லூரி மாணவர்கள் மற்றும் பட்டதாரிகள் சங்கத்தினரால் 12.02.2024 முதல் இடஒதுக்கீட்டின் அடிப்படையில் வேலைவாய்ப்பு, உதவித்தொகை உயர்த்தி வழங்குதல் உள்ளிட்ட 9 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்றிடக் கோரி போராட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சங்கத்தின் உறுப்பினர்களிடம் 17.02.2024 மற்றும் 21.02.2024 ஆகிய நாட்களில் மாண்புமிகு சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. கீதாஜீவன் அவர்கள் தலைமையில் மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரகத்தில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இந்நிகழ்வின் போது மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அரசு செயலாளர் திரு. எஸ். நாகராஜன், இ.ஆ.ப., மாற்றுத்திறனாளிகள் நலத்துறை இயக்குநர் திருமதி. எம். லக்ஷ்மி, இ.ஆ.ப., ஆசிரியர் தேர்வு வாரிய தலைவர் திருமதி. பி. ஸ்ரீவெங்கடபிரியா, இ.ஆ.ப., பள்ளி கல்வி துறை இயக்குநர் முனைவர் ஜி. அறிவொளி மற்றும் இதர உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

சங்கத்தின் சார்பில், அரசு வேலை வாய்ப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கான 4 சதவிகிதம் இட ஒதுக்கீட்டில், பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கு 1 சதவிகித இட ஒதுக்கீடு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுதல், அனைத்து துறைகளிலும் சிறப்பு ஆட்சேர்ப்பு மூலம் பணி நியமன நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், இரண்டு ஆண்டுகளுக்கு மேல் தொகுப்பூதியத்தில் பணிபுரியும் மாற்றுத்திறனாளிகளை பணி நிரந்தரம் செய்தல், ஆசிரியர் நியமனத்திற்கான போட்டித் தேர்வில் இருந்து விலக்கு அளித்தல், SLET மற்றும் NET தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு உதவி பேராசிரியர் பணியிடம் வழங்குதல், மாணவர்களுக்கான கல்லூரி கல்வி கட்டணம், தேர்வுக் கட்டணம் உள்ளிட்டவைகளுக்கு விலக்கு அளித்தல், பதவி உயர்வில் இட ஒதுக்கீடு வழங்குதல், அரசு பணிகளில் பணிபுரியும் மாற்றுத்திறனாளிகளுக்கு ஊர்திப்படி உயர்த்தி வழங்குதல், பழைய ஓய்வூதிய திட்டத்தினை அமல்படுத்துதல் உள்ளிட்ட கோரிக்கைகள் பற்றி பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

இப்பேச்சுவார்த்தையினை தொடர்ந்து அரசு இராயப்பேட்டை மருத்துவமனையில் உண்ணாவிரதமிருந்த 4 சங்க உறுப்பினர்களை மாண்புமிகு சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைகள் துறை அமைச்சர் அவர்கள் சந்தித்து கீழ்கண்ட கோரிக்கைகள் அரசால் படிப்படியாக நிறைவேற்றப்படும் என தெரிவித்து பார்வையற்றக் கல்லூரி மாணவர்கள் மற்றும் பட்டதாரிகள் சங்கத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டத்தினை கைவிடுமாறு அன்புடன் கேட்டுக்கொண்டார்.

1. அரசாணை 20, நாள் 24.07.2023 மாற்றுத்திறனாளிகள் நலத் துறையால் வெளியிடப்பட்டது. அதனை முழுமையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். அதன் அடிப்படையில் கண்டறியப்பட்ட பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நிரப்பப்படும் பணியிடங்களாக இருப்பின், அவற்றை நிரப்ப மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பு ஆட்சேர்ப்பு நடத்த ஆவன செய்யப்படும்.
2. கல்லூரியில் பயிலும் பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கு முதற்கட்டமாக அவர்கள் கல்வியினை அணுகல் தன்மையுடன் பெற மடிக்கணினிகள் மற்றும் நவீன வாசிக்கும் கருவிகள் வழங்க ஆவன செய்யப்படும்.
3. அரசு கல்லூரிகள், அரசு உதவிபெறும் கல்லூரிகள், மற்றும் பல்கலைகழகங்களில் பயிலும் பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பு கட்டண விலக்கு, கல்விக் கட்டண விலக்கு, தேர்வுக் கட்டண விலக்கு மற்றும் பதிலி எழுத்தர் தொகை (scribe allowance) ஆகியவற்றை முறையாக செயல்படுத்த உயர்கல்வித் துறை மூலம் சுற்றறிக்கை அனுப்ப ஆவன செய்யப்படும்.
4. அரசுப் பதவிகளில் உள்ள மாற்றுத்திறனாளிகள் பதவி உயர்வில் இட ஒதுக்கீடு வழங்கும் அரசாணை விரைவில் வெளியிட ஆவன செய்யப்படும்.

இதனைத் தொடர்ந்து, 23.02.2024 மற்றும் 27.02.2024 அன்று பார்வையற்றக் கல்லூரி மாணவர்கள் மற்றும் பட்டதாரிகள் சங்கத்தினருடன் மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரால் தொடர்ந்து நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையின் அடிப்படையில், மாண்புமிகு அமைச்சர் அவர்களால் படிப்படியாக நிறைவேற்றப்படும் எனத் தெரிவிக்கப்பட்ட கோரிக்கைகளோடு கூடுதலாக அரசின் நிதி உதவிபெறும் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் நிறுவனங்களில் உள்ள காலிப் பணியிடங்களை 2017 முதல் கண்டறிந்து அவை நிரப்பப்படுவது கண்காணிக்க வேண்டும் என சங்கத்தினரால் கேட்டுக்கொள்ளப்பட்டது. அக்கோரிக்கையினை ஏற்று அரசு வேலைவாய்ப்பில் 4% இட ஒதுக்கீடு வழங்குவதை உறுதி செய்ய அமைக்கப்பட்ட உயர்மட்டக்குழு மூலம் அரசின் நிதி உதவிபெறும் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் நிறுவனங்களில் உள்ள காலிப் பணியிடங்களை 2017 முதல் கண்டறிந்து அவை நிரப்பப்படுவது கண்காணிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

மேற்காணும் கோரிக்கைகள் படிப்படியாக நிறைவேற்றப்படும் எனத் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டது. எனவே, பார்வையற்றக் கல்லூரி மாணவர்கள் மற்றும் பட்டதாரிகள் சங்கத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டத்தினை கைவிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்பட்டது.

**இயக்குநர்**
**மாற்றுத்திறனாளிகள் நலத்துறை**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :
tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in